www.padippakam.com

முத்தமிழ் அறிவாலயம்

**Tamil Norsk Forening**

# சின்னப் பூக்கள்

இசை வடிவம், தயாரிப்பு

**தமயந்தி**



www.padippakam.com

இப் பாடற் தொகுப்பைப்
பெற்றுக்கொள்வதற்கான
தொடர்புகளுக்கு:

கார்மேகம் நந்தா
92 44 86 74

த.விக்கினேஸ்வரன்
22 21 87 15

மற்றும் எல்லா தமிழ்
வர்த்தக
நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

முத்தமிழ் அறிவாலயம்
**Tamil Norsk Forening**
Herslebs gt 43
0578 Oslo
NORWAY

படிப்பகம்

# வாருங்கள் குழந்தைகளே

பாடல்:1

**பாடியோர்: லலித், வதனி**

**எழுதியவர்: தமயந்தி**

*வாருங்கள் வாருங்கள் குழந்தைகளே- புதுப்*
*பாடல்கள் பாடிட மகிழ்வுடனே*
*பாடுங்கள் பாடுகள் குழந்தைகளே-இனிப்*
*பாரெங்கும் பிரிவினை நமக்குள் இல்லை*

*ஆடுங்கள் ஆடுங்கள் மகிழ்வுடனே- இனி*
*ஆனந்தம் நமக்கென்றும் உலகினிலே*
*சிரியுங்கள் சிரியுங்கள் குழந்தைகளே- புதுப்*
*மலர்களைப் போல் அகமகிழ்வுடனே*

*பறவைகள் பாருங்கள் வானத்திலே - ஒரு*
*பிரிவினை அதற்கில்லை புவியினிலே*
*கடலலை பாருங்கள் குழந்தைகளே- அவை*
*கரையுடன் நேசமாய்ப் பேசுவதை*

*மரங்களைப் பாருங்கள் இலைகளினை - அவை*
*ஆனந்தமாய் நடம் புரிவதனை*
*மலர்களைப் பாருங்கள் குழந்தைகளே- அவை*
*சிரிப்புடனே எம்மை அழைப்பதனை*

*வானத்தில் பாருங்கள் முகில்களினை - அவை*
*தாலாட்டுப் பாடியே திரிவதனை*
*பூமியைப் பாருங்கள் புல்வெளியை - பசும்*
*கம்பளம் விரித்தெமை அணைப்பதனை*

படிப்பகம்

# ஆடிப் பாடிடுவோம்

பாடல்:2

**பாடியோர்: உதயன்**

**எழுதியவர்: தமயந்தி**

ஆடிப் பாடிடுவோம் சின்ன மலர் நாங்கள்
வானில் மின்னுகின்ற நட்சத்திரம் போல

பாலனும் ஓடிவா பாடல்கள் பாடலாம்
பாமினி ஓடிவா பரதம் ஆடலாம்

மகிந்தன் ஓடிவா மேளமும் கொட்டலாம்
கார்த்திகா நீயும்வா கைத்தாளம் போடலாம்

# பட்டுப் பட்டுக் குஞ்சு

பாடல்:3
பாடியோர்: அபிராமி
எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி

பட்டுப் பட்டுக் குஞ்சு
பஞ்சுபோல குஞ்சு
தொட்டுப் பார்க்க ஆசை
கொத்திப்போடும் கோழி

கொக்கொக் என்று அம்மா
கூப்பிட்டதும் ஓடி
செட்டைக்குள்ளே பதுங்கும்
சின்னக் கோழிக் குஞ்சு

படிப்பகம்

www.padippakam.com

# சின்ன வண்ணப் பூக்கள்

பாடல்:4

**பாடியோர்: உதயன்**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

சின்ன வண்ணப் பூக்கள்
சிரிக்கும் நல்ல பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வந்துபாரும் பூக்கள்

சிவப்பு மஞ்சள் நீலம்
சேரும் வெள்ளை றோசா
அவற்றை மூக்கில் வைத்து
அறிவோம் நல்ல வாசம்

# வள் வள் நாய்க்குட்டி

பாடல்:5

**பாடியோர்: பானு**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

வள் வன் நாய்க்குட்டி
வாலை ஆட்டும் நாய்க்குட்டி
செல்லமான நாய்க்குட்டி
சின்ன வெள்ளை நாய்க்குட்டி

பந்தை அறிந்தால் ஓடும்
பாய்ந்து வாயில் கௌவும்
எந்தனோடு கூடி
என்றும் விளையாடும்

பூனைக் குட்டியோடு
போடும் செல்லச் சண்டை
ஆனால் நாயைக் கண்டால்
அது குரைக்கும் வள் வள்

படிப்பகம்

www.padippakam.com

# தாகத்துடன் ஒரு காகம்

பாடல்:6

**பாடியோர்: லாவண்யா**

**எழுதியவர்: தமயந்தி**

*தாகத்துடன் ஒரு காகம் அலைந்தது*
*எங்கேயும் தண்ணீர் கிடைக்கவில்லை*
*அங்கொரு ஓலைக் குடிசையின் முன்னாலே*
*தண்ணீர்க் குடம்தனைக் கண்டது*

*ஆகா என் தாகமும் தீர்ந்திடும் என்றெண்ணி*
*தண்ணீர் குடம்தனிற் தங்கியது*
*தண்ணீர்க் குடந்தனிற் கொஞ்சம் தண்ணீர் கண்டு*
*காகமும் ஏமாந்து யோசித்தது*

*எட்டாத தண்ணீரை விட்டுவிடுவதா*
*சற்று முயற்சித்து பார்ப்போமென்று*
*சின்னஞ்சிறு கற்கள் தன்னைப் பொறுக்கியே*
*தண்ணீர்க் குடத்துள் போட்டது*

*கற்கள் விழுந்ததும் மேல் வந்த தண்ணீரை*
*தாகம் தீரக் குடித்தது*
*என்றும் முயற்சியே வெல்லும் என்று சொல்லி*
*காகமும் பறந்து போனது*

www.padippakam.com

# மாரி பொழியுதடா

பாடல்: 7

**பாடியவர்: உதயன்**

**எழுதியவர்: கவிஞர் த.துரைசிங்கம்**

சோசோ சோசோ சோ என்று
சோனை மாரி பொழியுதடா
டண்டம் டண்டம் டடண்டமென்று
வானில் இடியும் இடிக்குதடா

பளபள பளபள பளபளவெனவே
பக்கம் மின்னல் மின்னுதடா
பார்த்த போது அக்கணமே
பளிச்சென்று கண்கள் கூசுதடா

காற்று சுழற்றி அடிக்குதடா
கறகற வென்று கேட்குதடா
பார்த்த மரங்கள் சரிந்துடனே
படபடவென என்று முறியுதடா

வெள்ளம் ஆறாய் ஓடுதடா
மேகம் இருண்டு தெரியுதடா
கொள்ளை கொள்ளையாகவே
குமிழி நீரில் மிதக்குதடா

www.padippakam.com

# மஞ்சள் நிறப்பந்து

பாடல்:8

**பாடியோர்: ஈழராஜ்**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

மாமா கொண்டு வந்தார்
மஞ்சள் நிறப்பந்து
பாமா நீலா செல்வி
பந்தடிக்க வருவார்

ஓங்கி ஓங்கி அடித்தால்
உயர்ந்து மேலே எழும்பும்
ஏந்திப் பின்னும் அடிப்போம்
எழும்பும் பந்தைப் பிடிப்போம்

உருட்டிப் பந்தை உதைப்போம்
ஓடி ஓடி எடுப்போம்
எடுத்து மேலே எறிவோம்
ஏந்தி ஏந்திக் குதிப்போம்

www.padippakam.com



# கறுப்பு நிறப் பூனையார்

பாடல்:9

**பாடியோர்: உதயன்**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

கறுப்பு நிறப் பூனையார்
கண்ணை மூடித் திறக்கிறார்
இருட்டில் எங்கே செல்கிறார்
எலியோ தேடிப் போகிறார்

பஞ்சு போன்ற கால்களை
பதுங்கி பதுங்கி வைக்கின்றார்
கொஞ்சம்கூட அமைதியைக்
குலைத்திடாமல் நடக்கிறார்

துள்ளி அங்கே பாய்கிறார்
துடித்து எலிப் பொந்திலே
மெள்ள ஓடித் தப்பிட
வெட்கத்தோடு நிற்கிறார்

படிப்பகம்

www.padippakam.com



# பறந்து செல்லும் பூச்சி

பாடல்: 10

**பாடியவர்: லாவண்யா**

**எழுதியவர்: கவிஞர் த.துரைசிங்கம்**

பறந்து செல்லும் பூச்சியை
பார்க்க ஆசை பெருகுதே
பட்டுப் பூச்சி தன்னையே
எட்டிப் பிடிக்கத் தோணுது

பூவின்மேலே அமர்ந்ததுமே
தேன்குடிக்கப் போகுது
நாவை மெல்ல நீட்டியே
நக்கிக் குடிக்கப் பார்க்குது

எட்டி நானும் பிடித்திட்டால்
எண்ணம் நிறைவேறிடும்
பாவம் அந்தப் பூச்சியும்
பறந்து செல்லப் பார்ப்போமே

www.padippakam.com



# வண்ணப் பூச்சி

## பாடல்: 11

## பாடியவர்: உதயன்

## எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி

வண்ண வண்ணப் பூச்சியே
வட்டம் இட்டு பூக்களில்
என்ன தேடித் திரிகிறாய்
எடுக்கத் தேனா பார்க்கின்றாய்?

மெல்லக் குழாயை வைக்கவும்
மெதுவாய் தேனை உறிஞ்சவும்
செல்ல வண்ணப் பூச்சியே
சொல்லித் தந்ததாரோ சொல்

என்ன என்ன வண்ணங்கள்
இருக்கும் உந்தன் செட்டையில்
எண்ண எண்ண ஆசைதான்
எனக்கு விரலோ போதாதே

படிப்பகம்

www.padippakam.com



# கரடிப் பொம்மை

பாடல்: 12

**பாடியவர்: பானு**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

பொம்மை நல்ல பொம்மை
புதிய கரடிப் பொம்மை
அம்மா தந்த கபாம்மை
அழகு மிக்க பொம்மை

சாவி கொடுத்தால் ஆடும்
தாளம் மெல்லப் போடும்
காவிச் சட்டை உடம்பில்
கண்ணில் மணி மின்னும்

நாலு சில்லில் ஓடும்
நன்கு சுழன்று ஆடும்
காலிரண்டும் ஆட்டிக்
கரணம் போடும் பொம்மை

படிப்பகம்

www.padippakam.com



# வா வா நிலவே

பாடல்: 13

**பாடியவர்: தமயந்தி**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

*வட்ட வட்ட நிலவே*
*வானில் ஓடும் நிலவே*
*கிட்ட ஓடி வா வா*
*கிண்ணப் பாலைத் தருவேன்*

*ஓடிவா வா நிலவே*
*ஒளித்திடாதே முகிலில்*
*ஆடிவாவா நிலவே*
*அம்பி விளையாட*

*கையை கையைக் காட்டி*
*கண்ணன் அழைக்கின்றான்*
*மெய்யாய் ஓடிவா வா*
*விரும்பி விளையாட*

படிப்பகம்

www.padippakam.com



# குட்டி ஆடே குட்டி ஆடே

பாடல்: 14

**பாடியவர்: பானு**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

குட்டி ஆடே குட்டி ஆடே
இங்கே ஓடிவா - உந்தன்
குரலைக் கேட்டு ஓடி வாறன்
இங்கே ஓடிவா

கட்டி அம்மா போடும் முன்னே
இங்கே ஓடிவா- நல்ல
கதைகள் எல்லாம் சொல்லித் தாறன்
இங்கே ஓடிவா

துள்ளித் துள்ளிக் கரணம் போட்டு
இங்கே ஓடிவா- உன்னைத்
தூக்கி தூக்கி முத்தம் தாறேன்
இங்கே ஓடிவா

படிப்பகம்

# கோலவண்ணப் பூச்சி

பாடல்: 15

**பாடியவர்: பானு**

**எழுதியவர்: கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை**

வண்ண வண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
கண்ணுக் கழகான
காட்சி தரும் பூச்சி

பட்டுத்துணி மீது
பஞ்சவர்ணத்தாலே
பொட்டிட்டது போல
போர்வை கொண்ட பூச்சி

வீசிச் சிறகாட்டி
மின்னல் ஒளி கூட்டித்
தேசதேசமெல்லாம்
சென்று வரும் பூச்சி

பூ நிறைந்த சோலை
புல்வெளிகளூடே
தேனிருக்கும் பூவை
தேடிச்செல்லும் பூச்சி

வண்ணமலர் மீது
வந்தமர்ந்து வேறோர்
வண்ணமலர்போலே
மாறிநிற்கும் பூச்சி

ஓடிப்பறந்து தெங்கும்
ஓய்தலின்றி ஊக்கம்
கூடியுழைக்கின்ற
கோலவண்ணப் பூச்சி

பூவை வருத்தாமல்
போயமர்ந்து தேனை
நாவினிக்கக் கொள்ளும்
நாகரீகப் பூச்சி

உண்மையொன்றும் கண்டோம்
ஊக்கத்திறம் கண்டோம்
வண்ணப் பூச்சி நன்றே
வாழந்திடுவோம் இன்றே

வண்ணப்பூச்சி போல
வாழந்திடுதல் வேண்டும்
எண்ணமிருந் தென்ன
இறக்கையெமக் கில்லை

# சோறளித்து வாழ்வு தர நாமே

**பாடல்: 16**

**பாடியவர்: பானு**

**எழுதியவர்: கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை**

ஏரதனில் மாடுகளைப் பூட்டி- வயலில்
ஈரமுள்ள போதவற்றை ஓட்டி
பாருழுது பண்படுத்துவோமே- உலகின்
ஆருயிர்க்கு வாழ்வு தரநாமே

பாத்திசெய்து நீரிறைத்து நேற்று - பிடுங்கி
சோத்து முடி கட்டிவைத்தோம் நாற்று
சேற்றிலந்த நாற்றுநடுவோமே- செந்நெல்
தேசமெங்கும் வாழ்வுதர நாமே

ஆற்றிவிட்ட கூந்தலினைப் போல- காற்றில்
ஆடியசைந் தோங்கும் பயிருடே
தோற்று புல்லைச் சென்று களைவோமே- உயிர்க்குச்
சோறளித்து வாழ்வு தர நாமே

படிப்பகம்

www.padippakam.com



# சின்னஞ்சிறு கிளியே

பாடல்: 17

## பாடியவர்: உதயன்

## பாரதியார் கவிதை

*சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா*
*செல்வக் களஞ்சியமே*
*என்னைக் கலிதீர்த்தே- உலகினில்*
*ஏற்றம் புரியவந்தாய்*

*பிள்ளைக் கனியமுதே-கண்ணம்மா*
*பேசும் பொற்சித்திரமே*
*அள்ளியணைத்திடவே- என் முன்னே*
*ஆடிவரும் தேனே*

*சற்றுன் முகம்சிவந்தால் -மனது*
*சஞ்சல மாகுதடி*
*நெற்றி சுருங்கக் கண்டால்- எனக்கு*
*நெஞ்சம் பதைக்குதடி*

*இன்ப கதைகளெல்லாம்- உன்னைப்போல*
*ஏடுகள் சொல்வதுண்டோ*
*அன்பு தருவதிலே- உனைநேர்*
*ஆகுமோர் தெய்வமுண்டோ*

# குருவியக்கா

பாடல்: 18

**பாடியவர்: மாலா**

**எழுதியவர்: வித்துவான் சி.குமாரசாமி**

தத்தித் தத்தித் குருவியக்கா
முற்றத்திலே வருகிறாள்
கொத்திக் கொத்திக் காயும் நெல்லைக்
குஞ்சுச் சொண்டால் தின்கின்றாள்

பதுங்கித் தம்பி பிடிக்கப்போனால்
பறந்து விலகிப் போகிறாள்
இறங்கி வந்து பின்னும் நெல்லை
எடுத்தெடுத்து தின்கின்றாள்

செட்டைக்குள்ளே சொண்டை வைத்து
சின்ன இறகைக் கோதுறாள்
வட்டமிட்டு வட்டமிட்டு
வளையில் வந்து குத்துறாள்

www.padippakam.com



# மழை

பாடல்: 19

**பாடியவர்: உதயன்**

**எழுதியவர்: கவிஞர் த.துரைசிங்கம்**

பள்ளிக்குப் போக வெளிப்பட்டாய்
பாலா மழையும் பெய்யுதடா
குடையை விரித்துப் பிடித்துக்கொள்
குளிரும் மழையில் நனையாதே

வெள்ளம் வழியில் நிற்குமடா
விளையாடாதே வெள்ளத்தில்
உள்ளங்காலில் நீர்ச்சிரங்கு
உண்டாகுமது பொல்லாதே

வழியில் வழுக்கல் மிகக்கவனம்
வழுக்கிக் கீழே வீழாதே
அழுக்காகும் உடை புத்தகமும்
அதையும் நீயே அறிவாயே

படிப்பகம்

# சின்னக் குருவி

பாடல்: 20

## பாடியவர்: உதயன்

## எழுதியவர்: உதயன்

சின்னச் சின்னக் குருவி நீங்கள்
எங்கிருந்து வருகிறீர்
வண்ண வண்ணச் சிறகடித்து
எங்கு பறந்து போகிறீர்
கொஞ்சம் நின்று பேசுவீர்

காலையிலே எழுந்தவுடன்
எங்களையே எழுப்புவீர்
கிக்கி என்று சொல்லி
என்ன நீங்கள் கதைக்கிறீர்
எங்களுக்கும் சொல்லுவீர்

மாலையிலே முற்றத்திலே
நாங்களுமே ஆடவே
சின்னச் சின்னச் சொண்டுகளால்
பாளைகளைக் கொறிக்கிறீர்
தென்னைகளில் குதிக்கிறீர்

உன்னையே எண்ணி எண்ணி
எந்தனுள்ளம் மகிழ்கிறேன்
உன்னைப்போலவே நானுமிங்கே
சின்னச் சிட்டுக் குருவிதான்
சிறகு இல்லாக் குருவிதான்